* 212 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state the basis on which licences are issued by the Commissioner of Police for holding kalai vizhas in residential areas in Madras City?

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

சென்னை மாநகரில் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் கலை விழாக்களை நடத்துவதற்கான உரிமங்கள் எந்த அடிப்படையில் காவல் துறைக் கமிஷனரால் வழங்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்னை மாநகரில் கலைவிழாக்கள் நடத்த காவல்துறைக் கமிஷனர் உரிமங்கள் வழங்குகிறார். ஆனால், இந்தக் கலைவிழாக்களை நடத்துவோர், 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரித்து நடக்க வேண்டும்.

Women Police Wing

* 213 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Chief Minister be pleased to state the present state of the proposal to appoint women police in our State?

மகளிர் காவல் பிரிவு.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

நம் மாநிலத்தில் பெண் காவலர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 1973-ம் ஆண்டிலேயே சென்னை மாநகர்க் காவற் பிரிவில், மகளிர் காவற் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மகளிர் காவல் பிரிவில் வேலைக்கு அமர்த்தப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சென்னை, கீழ்ப்பாக்கத்திலுள்ள காவல் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி பெறுகிறார்கள்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்தப் பயிற்சியில் எவ்வளவு பெண்கள் பயிற்சி பெறுகிறார்கள் ; இதை மேலும் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா ; இதில் பயிற்சி பெறுபவர்கள் எப்போது வேலைக்கு வருவார்களென்று அறிய விரும்புகிறேன்.

1974 மார்ச் 26]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 21 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சிக் காலம் 9 மாதங்கள். 27—12—73-ல் பயிற்சி தொடங்கப்பட்டது. பயிற்சி முடிந்ததும் அவர்கள் பணி தொடங்குவார்கள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, 9 மாதங்கள் அவர்கள் பயிற்சி பெற்ற பின்பு, அவர்களுடைய வேலைத் திறமை எப்படி இருக்கிறதென்பதைத் தெரிந்துகொண்டு, இதை நம்முடைய மாநிலம் பூராவும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அவர்களுடைய வேலைத் திறமையையும் அனுசரித்து, நம்முடைய நிதி நிலையையும் அனுசரித்து, அந்தக் காவல் துறையை தமிழ் மக்கள் எப்படி வரவேற்கிறார்களென்ற சூழ்நிலையையும் அனுசரித்து, விரிவாக்குவதுபற்றி பின்பு யோசிக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, காவல் துறையில் வரும் மகளிருக்குப் பொதுவாக போலீஸ்காரர்களுக்கு அளிக்கப்படும் பணிகள் அளிக்கப்படுமா அல்லது அவர்களுக்கென்று விசேஷப் பணி முறையை வகுத்து வேலை அளிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பயிற்சிக்குப் பிறகு இவர்களது பணி என்று வரையறுக்கப்பட்டிருப்பது: தவறான நடவடிக்கை உள்ள பெண்கள் நடமாடும் பகுதிகளில் ரோந்து சுற்றுதல்; வீடு இல்லாத இளம் பெண்களுக்குப் பாதுகாப்புப் பணியும், தவறான வழியில் ஈடுபடும் பெண்களுக்குத் தடுப்புக் காவல் பணியும் செய்தல்; விபச்சாரக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் போலீசாருக்கு உடன் சென்று உதவி புரிதல்; பெண் கைதிகளை நீதி மன்றங்களுக்கு அழைத்துச் செல்லுதல்; மற்றும் நீதி மன்றங்களில் அவர்களுக்குக் காவல் புரிதல் போன்ற பணிகளை நிறைவேற்றுதல்; ரிமாண்டுக்குச் செல்லும் பெண் குற்றவாளிகளையும், விசாரணைக்குச் செல்லும் குற்றவாளிகளையும் அழைத்துச் செல்லுதல்; பெண்களும், சிறுவர்களும் தாக்கப்பட்ட குற்றங்களில் விசாரணையின்போது போலீசாருக்கு உதவி செய்தல்; பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ள பெரிய பொதுக் கூட்டங்கள், திருவிழாக் கூட்டங்கள் போன்ற இடங்களில் பெண்கள் பகுதிகளில் அமைதி காக்க காவல் புரிதல்—ஆகிய பணிகள் அவர்களுக்காக வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியதில், பெண்களை ஒதுக்குவது போன்ற ஒரு நிலை ஏற்படுகிறது. பெண்களுக்கு சமநிலை என்று கூறும்போது, சமுதாயத்திலே ஆண்கள் செய்வது போன்ற வேலைகளிலும் அவர்களை ஈடுபடுத்துவது நம்முடைய கடமை என்பதை அரசு உணருகிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பதிலிலே எங்கே தனியாக ஒதுக்கினது போல் இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சமுதாயச் சூழ்நிலையை உணர்ந்து, அந்த அடிப்படையில்தான் இந்தப் பணிகள் தரப்பட்டிருக்கின்றன.

High Schools opened by the Government

* 214 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state the number of High Schools opened by the Government after 1st April 1970 in the 'A' Wing?

அரசால் தொடங்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள்.

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1—4—1970-க்குப் பின்னர், 'எ' பிரிவில் அரசால் தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 142.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, 1—4—1970-க்கு முன்னால் இருக்கக் கூடிய 'பி' பிரிவு பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றனவென்று அறிய விரும்புகிறேன். இப்போது 'எ' பிரிவு 'பி' பிரிவு என்று இருக்கும் பள்ளிகளை ஒன்றாக இணைப்பதற்கு அரசு விரைவாக முடிவு எடுக்குமா அல்லது 'எ' பிரிவு பள்ளிகளையும் 'பி' பிரிவு பள்ளிகளையும் தனித்தனியாக வைக்க, முடிவு எடுக்க இருக்கிறதாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளி விவரம்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் தரப்படும். 'எ' பிரிவு பள்ளிகளையும், 'பி' பிரிவு பள்ளிகளையும் ஒன்றாக இணைத்து, செயல்படுத்த